Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com R.DIS No: 60/2021 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்புப் பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வெள்ளிக்கிழமை, அக்டோபர் 08, 2021 | 4 பக்கங்கள் | ரூ.2/- | இதழ் 86

# முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை பின்பற்றுவதற்காக

## சென்னையில் இருந்து, ஆயுத பூஜையை முன்னிட்டு 12, 13-ந் தேதி சிறப்பு பஸ்கள் போக்குவரத்துத்துறை அமைச்சர் ராஜகண்ணப்பன்

சென்னை, அக் 08 2021: ஆயுத பூஜை பண்டிகை வருகிற 14-ந்தேதி (வியாழக்கிழமை) கொண்டாடப்பட உள்ளது. 15-ந்தேதி விஜயதசமி வருகிறது. தொடர்ச்சியாக சனி, ஞாயிற்றுக்கிழமை வருவதால் பொதுமக்கள் பலர் சொந்த ஊர்களுக்கு செல்ல திட்டமிடுவார்கள்.

இதை கருத்தில் கொண்டு ஒவ்வொரு ஊரிலும் சிறப்பு பேருந்துகளை கூடுதலாக இயக்க தமிழக அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. தற்போது கொரோனா பரவல் கட்டுப்படுத்தப்பட்டு வருவதால் பயணிகள் நெரிசல் மூலம் மீண்டும் தொற்று பரவல் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் போக்குவரத்துத்துறை கவனமாக உள்ளது.

இதை கருத்தில் கொண்டு பயணிகள் நெருக்கியடித்துக் கொண்டு அதிகளவில் பயணம் செய்வதை தவிர்க்க கூடுதல் பஸ்கள் இயக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதுபோல ஆயுத பூஜைக்காக வெளியூர் செல்லும் பயணிகள் கோயம்பேடு பஸ் நிலையத்தில் ஒரே இடத்தில் குவிவதை தடுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி பயணிகளை 3 இடங்களில் பிரித்து அனுப்ப முடிவு செய்துள்ளனர்.

சென்னையில் இருந்து, ஆயுத பூஜை பண்டிகையை முன்னிட்டு வருகிற 12-ந் தேதியும், 13-ந் தேதியும் சிறப்பு பஸ்கள் இயக்கப்பட உள்ளன. இதுகுறித்து போக்குவரத்துத்துறை





அமைச்சர் ராஜகண்ணப்பன் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறி இருப்பதாவது:-

முதல்- அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை பின்பற்றுவதற்காக வருகிற ஆயுத பூஜை பண்டிகையை முன்னிட்டு 12-ந்தேதி, 13-ந்தேதி ஆகிய 2 நாட்களில் சென்னை கோயம்பேடு பஸ் நிலையத்தில் இருந்து இயக்கப்படுகிற பின்வரும் வழித்தடப்பேருந்துகள் தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகைகளின் போது இயக்கப்பட்டது போல் கீழ்காணும் விவரப்படி 3 பஸ் நிலையங்களில் இருந்து இயக்கப்படும்.

இதர பஸ்கள் வழக்கம் போல் கோயம்பேடு பஸ் நிலையத்தில் இருந்து புறப்படும்.

1.தாம்பரம் ரெயில் நிலைய பஸ் நிலையம்.

2.பூந்தமல்லி பஸ் நிலையம்.

3.கோயம்பேடு பஸ் நிலையம்

இதில் தாம்பரம் ரெயில் நிலைய பஸ் நிலையத்தில் இருந்து திண்டிவனம் மார்க்கமாக திருவண்ணாமலை செல்லும் பஸ்கள் போளூர், சேத்பட்டு, வந்தவாசி, செஞ்சி மார்க்கமாக செல்லும் பஸ்கள் இயக்கப்படும்.

திண்டிவனம் வழியாக பண்ருட்டி, நெய்வேலி, வடலூர், சிதம்பரம், காட்டுமன்னார் கோவில் செல்லும் பஸ்களும், புதுச்சேரி, கடலூர், சிதம்பரம் செல்லும் பஸ்களும் இயக்கப்படும்.

பூந்தமல்லி பஸ் நிலையத்தில் இருந்து வேலூர், ஆரணி, ஆற்காடு, திருப்பத்தூர், காஞ்சிபுரம், செய்யாறு, ஓசூர், திருத்தணி, திருப்பதி செல்லும் பஸ்கள் இயக்கப்படும்.

கோயம்பேடு பஸ் நிலையத்தில் இருந்து மேல் குறிப்பிட்டுள்ள ஊர்களை தவிர மற்ற ஊர்களுக்கு செல்லும் பஸ்கள் (கிழக்கு கடற்கரை சாலை வழியாக புதுச்சேரி, கடலூர், சிதம்பரம் பஸ்கள்), மயிலாடுதுறை, தஞ்சாவூர், கும்பகோணம், திருவாரூர், திருத்துறைப்பூண்டி, நாகப்பட்டினம், வேளாங்கண்ணி, அரியலூர், ஜெயங்கொண்டம், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, செங்கோட்டை, தூத்துக்குடி, திருச்செந்தூர், நாகர்கோவில், கன்னியாகுமரி, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, காரைக்குடி, புதுக்கோட்டை, திண்டுக்கல், விருதுநகர், திருப்பூர், ஈரோடு, ஊட்டி, ராமநாதபுரம், சேலம், கோயம்புத்தூர் மற்றும் பெங்களூர் பஸ்கள் புறப்படும்.

எனவே பொது மக்கள் 3 பஸ் நிலையங்களில் இருந்து புறப்படும் பஸ் சேவையை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளலாம். இந்த பஸ் நிலையங்களுக்கு கோயம்பேடு பஸ் நிலையத்தில் இருந்து இணைப்பு பஸ்கள் மாநகர போக்குவரத்துக்கழகம் மூலம் இயக்கப்படும். பயணிகள் கண்டிப்பாக முக கவசம் அணிந்து பயணம் மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் ராஜகண்ணப்பன் கூறி உள்ளார்.

பயணிகள் கூட்டம் அதிகமாக வந்தால் அதற்கேற்ப கூடுதலாக சிறப்பு பஸ்கள் வெளியூர்களுக்கு இயக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கொரோனா 19 மெகா தடுப்பூசி சிறப்பு முகாம் தொடர்பான ஆலோசனைக்கூட்டம் அனைத்து துறை அலுவலர்களுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கிசெந்தில் ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அருகில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.ஜெயக்குமார், இ.கா.ப., மாநகராட்சி ஆணையர் திருமதி.சாருஸ்ரீ, இ.ஆ.ப., உதவி ஆட்சியர் பயிற்சி திரு.ஸ்ருதஞ் ஜெய் நாராயணன், இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கண்ணபிரான், துணை இயக்குநர் சுகாதார பணிகள் மரு.பொற்செல்வன் மற்றும் அலுவலர்கள் உள்ளனர். (07.10.2021)

# தூத்துக்குடி மாவட்டம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சாலைகள் மேற்பரப்பை சுரண்டி சாலைகள் அமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் தொடர்பாக வழிகாட்டி நெறிமுறைகள் - மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில் ராஜ், தகவல்

மும்பை, அக். 07 2021: சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை நீதிப்பேராணை வழக்கில் (எண்: 1963-2020 நாள்: 28.02.2020) ஊரகப்பகுதிகளில் குறிப்பாக குடியிருப்பு பகுதிகளில் சாலைகளின் மேற்பரப்பை சுரண்டிவிட்டு சாலைகள் அமைத்தல் மற்றும் சாலைகள் மேம்படுத்துதல் தொடர்பாக கண்டிப்புடன் பின்பற்ற வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

புதிய சாலைகள் அமைக்கும் போது, சாலைகளின் மேற்தளம் குடியிருப்பு பகுதிகளின் தரைமட்டத்தினை விட அதிகரிக்க கூடாது. தேவை ஏற்படின், குடியிருப்பு பகுதிகளின் தரைமட்ட அளவிற்கு சாலைகளின் மேற்பரப்பை சுரண்டி எடுத்து விட்டு பணி மேற்கொள்ள வேண்டும்.

ஏற்கனவே உள்ள சாலைகளை பழுதுபார்த்தல் ஃ பலப்படுத்துதல் பணிக்கு சாலைகளின் ஏற்கனவே உள்ள மேற்தளத்தினை முற்றிலும் நீக்கி விட்டு புதிய மேற்தளத்தினை அமைக்க வேண்டும். குடியிருப்பு பகுதிகளின் தரைமட்டத்தினை கவனத்தில் கொள்ளாமல் சாலையின் மட்டம் அதிகரிக்கப்பட கூடாது. சாலைப்பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்யும் பொழுது மேற்படி அறிவுரைகளை கவனத்தில் கொள்ள வேண்டும். ஊரகப்பகுதிகள்ஃகுடியிருப்பு பகுதிகளில் உள்ள அனைத்து சாலைகள் அமைத்தல்ஃமேம்படுத்துதல் பணிகள் வடிகால் வசதியுடன் ஏற்படுத்தப்பட வேண்டும். இதன்மூலம் மழைநீர் குடியிருப்பு பகுதிகளுக்கு நுழையாமல் முறையாக வடிவதற்கு வழிவகை ஏற்படுகிறது. ஊராட்சிப்பகுதிகளில் சாலை மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளும் போது ஏற்கனவே உள்ள சாலை மட்டத்தினை உயர்த்துவதால் சாலையின் தன்மை (நடைப்பாதை, வடிகால் முதலியவை) பாதிக்கப்படுகிறது .

ஏற்கனவே இரண்டு, மூன்று அடுக்கு அடர்தார் தளம் போடப்பட்டு இருக்கும் சாலைகளில் மேலும் ஓர் அடுக்கு அடர்தார் தளம் அமைத்து சாலை மட்டத்தை உயர்த்த வேண்டியது இல்லை.

எந்த சூழ்நிலையிலும் சாலைகளின் மட்டம் அதிகரிக்கப்படக் கூடாது.

சாலைகளின் மேற்தள கட்டுமானத்தை மட்டும் தேவைப்படும் கனத்திற்கு சுரண்டி எடுத்து விட்டு அதே அளவுக்கு மேற்தளம் இட வேண்டும். இது வீடுகளுக்குள் நீர்புகுவதை தடுக்கும்.

புதியதாக சாலைகள் அமைக்கும் போது ஃ சாலையினை மேம்படுத்தும் போது பணியினை தொடங்குவதற்கு முன்பு ஒப்பந்ததாரர் சாலையின் மட்டத்தினை கண்டிப்பாக குறித்து கொள்ள வேண்டும்.

மேற்படி வழிகாட்டு நெறிமுகைளின்படி நடைபெறாத சாலைப்பணிகள் குறித்து இணையதளம் வாயிலாக (www.tnrd.gov.in)பொது மக்கள் புகார் தெரிவிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில் ராஜ், தெரிவித்துள்ளார்.

**மலுமிச்சம்பட்டி: கோவை மலுமிச்சம்பட்டி ஊராட்சி செயலர் கார்த்திக் மாற்றியதை கண்டித்து மலுமிச்சம்பட்டி ஊராட்சி தலைவர் பழனியம்மாள், துணைத் தலைவர் சதீஷ்குமார், உட்பட வார்டு உறுப்பினர்கள், பொதுமக்கள், மதுக்கரை ஒன்றிய அலுவலகத்தை முற்றுகையிட்டனர்.**




# டாஸ்மாக் தொமுச கண்டன அறிக்கை!!!

வருஷநாடு அக்டோபர் 08 2021: காஞ்சிபுரம் டாஸ்மாக் வடக்கு மாவட்ட ஓரகடம் கடை எண்4109 விற்பனையாளர் திரு.துளசி மற்றும் அதே கடையை சார்ந்த விற்பனையாளர் திரு. ராமு ஆகியோர் சமூக விரோதிகளால் அரிவாளால் தாக்கப்பட்டு திரு துளசி அவர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில் ராமு அவர்கள் கடுமையான வெட்டுக்காயங்களுடன் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார் இந்த துயரச் சம்பவம் மிகுந்த வருத்தத்திற்கு உரியது. எனவே தொமுச தலைமைச் சங்கம் இச்சம்பவத்தை வன்மையாக கண்டிக்கிறது.

இந்த சம்பவத்தை நிகழ்த்திய கொடூரக் கொலைகாரர்களை உடனடியாக அடையாளம் கண்டு கைது செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இது போன்ற குற்றச் சம்பவங்கள் மேலும் நடக்காமல் இருக்க தமிழகம் முழுவதிலும் உள்ள பாதுகாப்பற்ற இடங்களில் உள்ள கடைகளை பாதுகாப்பான இடங்களுக்கு உடனடியாக மாற்றி அமைத்திட வேண்டும். டாஸ்மாக் நிர்வாகம் பணியாற்றக்கூடிய பணியாளர்களுக்கு தகுந்த பாதுகாப்பை வழங்கி பணியாளரின் உயிருக்கு உத்தரவாதம் வழங்கி மன அமைதியுடன் பணி செய்திட உறுதிப்படுத்தவேண்டும்.

கொடூரத் தாக்குதலுக்கு ஆளாகி உயிரிழந்த தொழிலாளியின் குடும்பத்திற்கு இழப்பீடாக ரூபாய் 50 லட்சம் மற்றும் கல்வி தகுதிக்கு ஏற்ப குடும்பத்தில் ஒருவருக்கு அரசு பணியும் வழங்கிட வேண்டும்.

படுகாயமடைந்து செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் தொழிலாளிக்கு உயர்தர சிகிச்சை வழங்கிட வேண்டும் அதற்கான முழு செலவையும் நிர்வாகம் ஏற்றுக் கொள்ள வேண்டும். பலத்த வெட்டு ககாயங்களுடன் உயிருக்கு போராடிக்கொண்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் தொழிலாளிக்கு ரூபாய் 10 லட்சம் இழப்பீடு நிதி வழங்கிட வேண்டும், அவரால் பணியாற்ற இயலாத நிலை ஏற்படுமாயின் அவருடைய குடும்பத்தின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு குடும்பத்தில் ஒருவருக்கு கல்வித் தகுதிக்கு ஏற்ப அரசுத் துறையில் பணி வழங்கி உதவிட வேண்டும் என டாஸ்மாக் தொமுச தலைமைச் சங்கம் தமிழக அரசையும் டாஸ்மாக் நிர்வாகத்தையும் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

இப்படிக்கு ஆ.இராசவேல் துணைத் தலைவர், தொமுச பேரவை. மாநிலத் தலைவர், டாஸ்மாக் தொமுச எம் சிவப்பிரகாசம் பொதுச் செயலாளர். அறிவித்துள்ளார்.

# மாவட்ட ஆட்சியரின் உத்தரவின் பேரில் மரக்கன்றுகள் நடப்பட்டது

வருஷநாடு அக்டோபர் 08 2021: கடமலை மயிலை ஒன்றியம் பொண்ணம் படுகை ஊராட்சி பகுதிகளில் தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவின் பேரில் மரக்கன்றுகள் பொண்ணம் படுகை ஊராட்சி மன்ற தலைவர் கா பூங்கா காத்தமுத்து அவர்கள் தலைமையில் பொண்ணம் படுகை ஊராட்சி சாலை ஓரமாக மரக்கன்றுகள் நடவு செய்யும் பணிகள் தீவிரம் செய்யப்பட்டு வருகிறது மரக்கன்றுகளை பொதுமக்கள் பாதுகாத்து வரும்படி எழில்மிகு கிராமமாக மாற்ற பொன்னம் படுகை ஊராட்சியின் சார்பாக



பொதுமக்களை அன்போடு ஊராட்சி மன்ற தலைவர் கேட்டுக் கொள்கின்றார்.

நாகர்கோவில்: நாகர்கோவில் மாநகராட்சியில் வீடுகளில் மக்கும் குப்பைகளை கொண்டு இயற்கை உரம் தயாரிக்கும் வகையில் பைப் கம்போஸ்டிங் முறை அறிமுகப்படுத்தப்பட்டு மாநகர பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதன்படி இன்றைய தினம் மாநகராட்சி ஆணையர் ஆஷா அஜித் உத்தரவின்படி ஞானம் நகர் பகுதியில் உள்ள மக்களுக்கு பைப் கம்போஸ்டிங் முறையின் பயன்பாடுகள், மற்றும் செயல்முறை விளக்கத்தை மாநகர்நல அலுவலர் விஜய் சந்திரன் அங்குள்ள மக்களுக்கு எடுத்துரைத்தார்கள். நிகழ்வில் சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் குடியிருப்போர் சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.





# கண்டு கொள்ளாத பேரூராட்சி நிர்வாகம்

*கன்னியாகுமரி, அக். 08 2021:* கன்னியாகுமரி மாவட்டம் கன்னியாகுமரி பேரூராட்சிக்குட்பட்ட 18 வார்டுகள் உள்ளன இதில் 17 வது வார்டில் சுமார் 400 குடும்பங்கள் உள்ளன பேரூராட்சிக்கு சொந்தமான ஓடையில் சுத்தம் செய்யாமல் கழிவுநீர் வெளியே வந்து ரோட்டில் ஊர் மக்கள் நடப்பதற்கு இடையூறாக இருக்கிறது

17வது வார்டு பொதுமக்கள் அனைவரும் சேர்ந்து பேரூராட்சி நிர்வாகத்திடம் கழிவுநீர் ரோட்டில் வருவதை போட்டோ எடுத்து மணிக்குள்ளாக பலமுறை கொடுத்துள்ளனர் ஆனால் பேரூராட்சி நிர்வாகம் கண்டுகொள்ளவில்லை இதனால் நோய் தொற்று ஏற்படும் அபாயம் உள்ளது கொரோனா நோயின் தாக்கம் அதிகமாக உள்ள நிலையில் பேரூராட்சி நிர்வாகம் கண்டுகொள்ளாததால் பலருக்கு காய்ச்சல் வாந்தி என பல நோய்கள் வந்துள்ளன எனவே உடனடியாக பேரூராட்சி நிர்வாகம் பொறுப்பேற்று உடனே சீரமைத்து தருமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்

உடனடியாக ஓடையை சீரமைத்து தரவில்லை என்றால் 17வது வார்டு பொதுமக்கள் அனைவரும் சேர்ந்து பேரூராட்சி அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாகவும் தெரிவித்துள்ளனர்.





வாடிப்பட்டி: மதுரை மாவட்டம் வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட காடுபட்டி ஊராட்சிக்குட்பட்ட பெரியார் காலனியில் கழிவுநீர் செல்லும் வாய்க்கால் குப்பை, சகதியாக அடைபட்டு தண்ணீர் செல்ல வழியில்லாமல் பொதுமக்களுக்கும் குடியிருப்புவாசிகளுக்கும் நோய்பரப்பும் வகையில் பாதுகாப்பற்ற முறையில் இருந்து வந்தது, இதனையடுத்து கழிவுநீர் செல்லும் வாய்க்காலை சரிசெய்ய கிராம மக்கள் கோரிக்கை விடுத்திருந்த நிலையில் காடுபட்டி ஊராட்சி மன்ற தலைவர் ஆனந்தன் தலைமையில் குப்பைகூளங்கள் சகதிகள் அகற்றப்பட்டு கழிவுநீர் தேங்காமல் சீராக செல்வதற்கு சீரமைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து கழிவுநீர் செய்வதற்கு நிரந்தரமாக வாய்க்கால் அமைக்கப்படும் என்று காடுபட்டி ஊராட்சி மன்ற தலைவர் ஆனந்தன் கூறினார்.



# பிரியங்கா காந்தியை கைது செய்த உத்திரப்பிரதேச பிஜேபி அரசை கண்டித்து சாத்தூர் சட்டமன்ற தொகுதி இளைஞர் காங்கிரஸ் சார்பாக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

*சாத்தூர், அக்-08 2021:* பிரியங்கா காந்தியை கைது செய்த உத்திரப்பிரதேச பிஜேபி அரசை கண்டித்து, சாத்தூர் சட்டமன்ற தொகுதி இளைஞர் காங்கிரஸ் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு, நகர காங். தலைவர் அய்யப்பன் தலைமை வகித்தார்

விருதுநகர் மேற்கு மாவட்ட காங். பொதுச்செயலாளர் எம். ஜோதி நிவாஸ், மாவட்டச்செயலாளர் சந்திரன், வட்டாரத்தலைவர் இருக்கன்குடி சுப்பையா,

மாவட்ட இளைஞர் காங்கிரஸ் தலைவர் மாயக்கண்ணன் ஆகியோர்



முன்னிலை வகித்தனர்

இந்த ஆர்ப்பாட்டத்திற்கான ஏற்பாடுகளை சாத்தூர் சட்டமன்ற தொகுதி இளைஞர் காங்கிரஸ் தலைவர் கும்கி கார்த்திக் செய்திருந்தார். உத்திரப் பிரதேச பிஜேபி அரசை கண்டித்து சாத்தூர் ஒன்றிய செயலாளர் ரமேஷ் கண்டன கோஷங்களை முழங்கினார்.

நகர காங்கிரஸ் துணைத் தலைவர் சேதுராமலிங்கம், ஜெயபாலன், சின்னப்பன், ஆறுமுகம், வெள்ளைச்சாமி, வட்டார துணைத்தலைவர் ஒத்தையால்முத்துவேல், நகர செயலாளர் ஆட்டோ ராஜ்குமார், சத்திரப்பட்டி லட்சுமணன், ஒன்றிய மாணவரணி தலைவர் மணிவண்ணன், கோவிந்தன், படந்தால் பாலு நாயக்கர், சுதர்சன் டெய்லர், ஹரி கிருஷ்ணன், நகர இளைஞரணி தலைவர் சதாம் உசேன், மகிளா காங்கிரஸ் தலைவி எலிசா மற்றும் காங்கிரஸ் நகர நிர்வாகிகளும் காங்கிரஸ் பேரியக்க தொண்டர்களும் கலந்து கொண்டனர்.

# 12 ஆயிரம் சதுர அடியில் 4 தளங்களுடன் பீமா ஜுவல்லர்ஸ் புதிய ஷோரூம் சென்னை தி. நகரில் திறப்பு



*சென்னை, அக்.08 2021:* தென்னிந்தியாவில் பெங்களூர், மங்களூர், உடுப்பி, ஹாசன், ஷிவமோகா, விஜயவாடா மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தில் 40 மேற்பட்ட ஷோரூம்களை கொண்டுள்ள பீமா ஜூவல்லர்ஸ் தனது புதிய ஷோரூமை சென்னை தி.நகர் வடக்கு உஸ்மான் சாலையில் திறந்துள்ளது. தரம், தூய்மை, சிறந்த வடிவமைப்பு மற்றும் நம்பிக்கையின் சின்னமாக கடந்த 97 ஆண்டுகளாக திகழ்ந்து வரும் பீமா ஜூவல்லர்ஸ் சென்னையில் திறக்கும் முதல் ஷோரூம் இதுவாகும். இந்த புதிய ஷோரூம்சென்னை நகரின் புகழ்பெற்ற ஷாப்பிங் மையமாக திகழும் தி.நகரில் திறக்கப்பட்டுள்ளது. இதை பீமா ஜூவல்லர்ஸ் இயக்குனர் விஷ்ணு சரண் கே பட், வாடிக்கையாளர்கள் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் முன்னிலையில் திறந்து வைத்தார்.

சென்னைதி.நகர், வடக்கு உஸ்மான்சாலையில் அமைந்துள்ள இந்த அதிநவீன ஷோரூம், நகைவாங்க விரும்பும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் சிறந்த அனுபவத்தை வழங்கும். இந்த புதிய ஷோரூம் 12 ஆயிரம் சதுர அடியில் 4 தளங்களைக் கொண்டுள்ளது. கொரோனாவுக்கு பிந்தைய புதிய வாழ்க்கை முறை காரணமாக இங்கு சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவை மிகவும் கடுமையாக கடைபிடிக்கப்படுகின்றன. இந்த புதியஷோரூம் அதன் வாடிக்கையாளர்களுக்கு சிறப்பாக வடிவமைக்கப்பட்ட நகை மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட ஷாப்பிங் அனுபவத்தை வழங்கும். வாடிக்கையாளர்களின் வசதிக்கு ஏற்ப வாலட் கார் பார்க்கிங் வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும், தனது வாடிக்கையாளர்களுக்கு ஒரு தனித்துவமான அனுபவத்தை வழங்குவதற்காக புதுமை முயற்சியாக 'ஏஆர் அனுபவ மையம்' என்னும் புதிய பிரிவு இங்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்த ஏஆர் தொழில்நுட்பத்தில் வாடிக்கையாளர்கள் விதவிதமான நகைகளின் தரம் மற்றும் அது சம்பந்தப்பட்ட விவரங்களை சரிபார்த்து தெரிந்து கொள்ளலாம். மேலும் வாடிக்கையாளர்கள் 'வீடியோ கால்' மூலமாக அவர்கள் விரும்பும் நகைகளை வாங்கிக் கொள்ளலாம் மற்றும் எங்களின் இணையதளம் **www.bhimagold.com** மற்றும் அமேசான் மற்றும் பிளிப்கார்ட் ஆகிய ஆன்லைன் தளங்களிலும் வாடிக்கையாளர்கள் நகைகளை பார்த்து வாங்கலாம்.

புதிய ஷோரூம் திறப்பு குறித்து இதன் இயக்குனர் விஷ்ணு சரண் கே பட் கூறுகையில், தி.நகர்வடக்கு உஸ்மான் சாலையில் அனைத்து நவீன வசதிகளுடன் துவக்கப்பட்டுள்ள எங்களின் முதல் ஷோரூம் உடன் 'பிராண்ட்பீமா' என்னும் மந்திரத்தை சென்னைக்குக் கொண்டு வருவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இங்குள்ள அனைத்து நகைகளும் வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. எங்கள் நகைகளின் தூய்மை மற்றும் தரம் ஆகியவை தனித்துவமிக்கவையாக இருக்கும். எங்களின் 'யூலைசிறந்த தயாரிப்புகள்' வடிவமைப்பதில் துவங்கி அதை நன்றாக முடித்து கடைசியாக எங்கள் வாடிக்கையாளர்களைச் சென்றடையும் வரை அனைத்து நகைகளின் தரமும் கடுமையாக பரிசோதிக்கப்படுகிறது. இந்தியாவிலேயே தங்கத்திற்கான தேவை உள்ள நகரங்களின் பட்டியலில் சென்னை நகரம் முதலிடம் வகிக்கிறது. விலைமதிப்பற்ற உலோகம் என்பதாலும் அதன் கலாச்சார முக்கியத்துவம் மற்றும் அது ஒரு லாபகரமான முதலீடு என்பதன் காரணமாகவும் மக்கள் தங்கத்தை அதிக அளவு விரும்புகிறார்கள். இந்தியாவைப் பொறுத்தவரை சென்னையில் தான் அதிக அளவு தங்கம் கொள்முதல் மற்றும் விற்பனை செய்யப்படுகிறது. கடந்த பல ஆண்டுகளாக உலகம் முழுவதும் உள்ள வாடிக்கையாளர்கள் எங்கள் மீது வைத்துள்ள நம்பிக்கையின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட எங்கள் வளமான பாரம்பரியத்திலிருந்து மிகச்சிறந்த தரத்தை சென்னைக்கு கொண்டு வருவதில் நாங்கள் உண்மையில் மகிழ்ச்சி அடைகிறோம் என்று தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில், 'நகைகளுக்கான மணிமகுடமாக' தி. நகர் திகழ்கிறது. இங்கு பெரிதும் சிறிதுமாக நூற்றுக்கும் மேற்பட்ட நகைக் கடைகள் உள்ளன. எங்களின் ஷோரூம் திறக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடத்திலும் வாடிக்கையாளர்களிடம் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. எங்களின் தூய்மையான வாக்குறுதி மற்றும் நேர்த்தியான நகைகள் வடிவமைப்பு மற்றும் இணையற்ற வாடிக்கையாளர் சேவை ஆகியவற்றால் மக்கள் எங்கள் மீது நன்மதிப்பை வைத்திருக்கிறார்கள். நகர மக்களுக்கு எங்கள் தூய்மையையும் கைவினைத் திறனையும் காட்டவேண்டிய நேரம் வந்துவிட்டது என்று நாங்கள் நம்புகிறோம் என்று பட் தெரிவித்தார்.

# வேப்பூர் அருகே புளியமரத்தில் வேன் மோதி விபத்து 25 க்கும் மேற்பட்டோர் காயம், போலீசார் விசாரணை

*வேப்பூர் அக் 08 2021:* வேப்பூர் அருகிலுள்ள கண்டபங்குறிச்சி கிராமத்தில் வேன் மரத்தில் மோதி விபத்து ஏற்பட்டதால் சுமார் 25 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

கடலூர் மாவட்டம், வேப்பூர் அருகிலுள்ள கண்டபங்குறிச்சி கிராமத்தை சேர்ந்த. வினோத்குமார் என்பவர் தே,புடையூர் கைகாட்டி அருகே விருத்தாசலம் சேலம் சாலையில் தங்களது எள்ளு செடிகளை காயவைத்து கொண்டிருந்தனர்.

இந்நிலையில் அக்டோபர் 7- ந் தேதி மதியம் 2 மணியளவில் நெய்வேலி தெற்கு வெள்ளூர் பகுதியிலிருந்து தொழுதூர் அருகிலுள்ள வடகராம்பூண்டி கிராமத்தில் நடக்க இருந்த பிறந்த நாள் விழாவிற்கு டிஎண் 51 ஆர்,2853 என்ற எண்ணுள்ள டூரிஸ்ட் வேனில் சுமார் 8



ஆண்கள், 7 குழந்தைகள், 23 பெண்கள் என மொத்தம் 38 பேர் சென்று கொண்டிருந்தனர்.

அப்போது எள்ளுசெடி காயவைத்த கண்டபங்குறிச்சி வினோத்குமார் மகன் அரிகரசுதன் (வயது 4) என்பவர் திடீரென்று தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சாலையில் ஓடியுள்ளார்.

அதனால் சிறுவன் மீது மோதமலிருக்க ஓட்டுனர் ஊமங்களம் வெங்கடேசன் வேனை வலது பக்கம் பிரேக் போட்டு திருப்பியுள்ளார்.

அப்போது ஓட்டுனர் கட்டுபாட்டை இழந்த வேன் அருகிலுள்ள புளியமரத்தில் மோதி கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இதில் வேனை ஓட்டிய டிரைவர் வெங்கடேசன், சாலையில் குறுக்கே ஓடிய சிறுவன் அரிகரசுதன், வேனில் பயணம் செய்த. நெய்வேலி பன்னீர்செல்வம் மனைவி ராணி (வயது45), பாலகிருஷ்ணன் மனைவி தனலட்சுமி (வயது 25), கனகசபை மகன் செல்வம் (வயது 37), செல்வராசு மகன் கலியமூர்த்தி (வயது 43), கலியமூரத்தி மனைவி தேவி (வயது 37), நேரு மனைவி சந்திரா (வயது52) உள்ளிட்ட பயணம் செய்த 38 பேரும் காயமடைந்தனர் இதில் 12 பேர் மேல் சிகிச்சைகாக கடலூர் மற்றும் பாண்டிச்சேரி மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்க பட்டனர்.

இந்த விபத்து குறித்து தகவலறிந்த வேப்பூர் போலிசார் மற்றும் வருவாய்துறையினர் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று காயம்பட்டவர்களை, அப்பகுதி பொதுமக்கள் உதவியுடன் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர் மேலும் இந்த விபத்து தொடர்பாக போலிசார் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர்.

# சாத்தியம், வெண்கரும்பூர் வாக்கு சாவடி மையங்களில் தேர்தல் பார்வையாளர் ஆய்வு

*வேப்பூர், அக் 08 2021:* கடலூர் மாவட்டம், நல்லூர் ஒன்றியத்தில் உள்ளாட்சி தேர்தல் நடக்கும் வாக்கு சாவடி மையங்களை தேர்தல் பார்வையாளர்கள் ஆய்வு செய்தனர்.

நல்லூர் ஒன்றியத்தில் வேப்பூர் அருகிலுள்ள சாத்தியம் ஊராட்சி தலைவர் பதவிக்கும், வெண்கரும்பூர் ஊராட்சியில் 4வது வார்டு உறுப்பினர் பதவிக்கும், நாளை 9ம் தேதி உள்ளாட்சி இடைத்தேர்தல் நடக்கிறது.

அதையொட்டி, தேர்தல் நடக்கும் வாக்கு சாவடி



மையங்களை தேர்தல் பார்வையாளர் நந்தகோபால் ஆய்வு செய்தார். அப்போது வாக்கு சாவடி மையத்தின் பாதுகாப்பு, சுற்றுச்சூழல், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்தார். அவருடன்ந நல்லூர் பி.டி.ஓ., சிவகுருநாதன், துணை பி.டி.ஓ.,க்கள் ராஜாராமன், விஜயகுமார், பொறியாளர் சாந்தி ஆகியோர் உடனிருந்தனர்.

Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

HELLO Mirror MADRAS
hellomadrasdaily@gmail.com
R.DIS No: 60/2021
Daily Morning Newspaper
The Truth

KARUNAII TRUST
Contact : 98413 59935

VOLUME - 1 | CHENNAI | DAILY | 4 Pages | Friday, October 08, 2021 | Rs.2/- | ISSUE - 86

# Cabinet approves Productivity Linked Bonus to Railway Employees for the year 2020-21 - General Manager



Chennai, October 08 2021: The Union Cabinet, chaired by the Prime Minister Narendra Modi, today approved the Productivity Linked Bonus (PLB) equivalent to 78 days' wages for the financial year 2020-21 for all eligible non-gazetted Railway employees (excluding RPF/RPSF personnel). The financial implication of payment of 78 days' PLB to railway employees has been estimated to be Rs.1984.73 crore. The wage calculation ceiling prescribed for payment of PLB to the eligible non-gazetted railway employees is Rs.7000/- p.m. The maximum amount payable per eligible railway employee is Rs. 17,951 for 78 days. About 11.56 lakh non-gazetted Railway employees are likely to benefit from the decision.

Payment of PLB to eligible railway employees is made each year before the Dusshera/ Puja holidays. The decision of the Cabinet shall be implemented before the holidays for this year as well. The PLB amount of 78 days' wages were paid for the financial years from 2010-11 to 2019-20. For the year 2020-21 also PLB amount equivalent to 78 days' wages will be paid which is expected to motivate the employees for working towards improving the performance of the Railways. The Productivity Linked Bonus on Railway covers all non-gazetted railway employees (excluding RPF/RPSF personnel) who are spread over the entire count.

a) The PLB has been paid as per formula approved by the Cabinet in its meeting held on 23.9.2000 for the years 1998-99 to 2013-14 (except 2002-03 to 2004-05 when slight changes were done with respect to Capital Weightage and Staff Strength). This formula was input : output based where output was reckoned in terms of equated net tonne kilometres and input was reckoned as the non-gazetted staff strength (excluding RPF/RPSF personnel) modified by Capital Weightage.

b) For the financial year 2012-13, PLB for 78 days was approved as a special case with the condition that the formula for PLB would be revisited keeping in view the recommendations of the Sixth CPC and the views of the Ministry of Finance. Consequently, the Ministry of Railways constituted a Committee to evolve a new formula.

c) The Committee recommended that weightage to both the formula of year 2000 and die new formula based on Operation Ratio (OR) may be in the ratio of 50 : 50. This ensured equal representation to the productivity in terms of physical parameters as well as financial parameters. The formula recommended by the Committee has been used for calculation of PLB from 2014-15 to 2019-20.

Railways were the first departmental undertaking of the Government of India wherein the concept of PLB was introduced in the year 1979-80. The main consideration at that time was the important role of the Railways as an infrastructural support in the performance of the economy as a whole. In the overall context of Railway working, it was considered desirable to introduce the concept of PLB as against the concept of Bonus on the lines of 'The Payment of Bonus Act -1965'. Even though the Payment of Bonus Act does not apply to the Railways, yet the broad principles contained in that Act were kept in view for the purpose of determining the "Wage/Pay Ceiling", definition of 'Salary'/'Wage', etc. The PLB Scheme for the Railways came into force from the year 1979-80 and was evolved in consultation with the two recognized Federations namely, All India Railwaymen's Federation and National Federation of Indian Railwaymen and with the approval of the Cabinet. The scheme envisages a review every three years.

John Thomas, General Manager, Southern Railway held a Press Meet to brief the media on the major Cabinet decision on approval for payment of Productivity linked Bonus to non-gazetted Railway staff. He stated that in Southern Railway the Productivity Linked Bonus will be paid to 72241 non-gazetted employees (excluding Officers and RPF/RPSF staff) with nearly Rs. 130 Crores being disbursed to these employees. This bonus will be credited through bank transfer by 15th of this month, he added.

General Manager stated that Indian Railway, including Southern Railway, has performed well during the last Financial year and during the 6 months of the Current financial year.

Highlighting the achievements of Southern Railway during the year 2020-21, General Manager stated that there has been significant increase in punctuality indices to 93%, freight loading for the FY 2020-21 surpassed the previous year by 12% and freight earnings surpassed by 25%.

# Ministry of Textiles and GIZ signs an MOUon Implementation Agreement of Indo German Technical Cooperation project on 'Sustainability and Value Added in the Cotton Economy'



Chennai, October 08 2021: As part of the Indo German Development cooperation framework, the German Federal Ministry for Economic Cooperation and Development (BMZ) has collaborated with Ministry of Textiles (MoT) supported by Ministry of Agriculture and Farmers Welfare (MoAFW). An MOU was signed between Deutsche Gesellschaft fur InternationaleZusammenarbeit (GIZ) and the Ministry of Textiles Govt. of India on Implementation Agreement of Indo German Technical Cooperation Project on 'Sustainability and Value Added in the Cotton Economy' here today. The objective of the project is `to increase the value addition from sustainable cotton production in India by focusing on sustainable cotton, and strengthening of downstream processing'. It is focussing on 4 majorly cotton producing states- Maharashtra, Gujarat, Madhya Pradesh and Tamil Nadu and will work closely with them and the related agencies. The MoU was signed by Shri Sanjay Sharan, Joint. Secretary on behalf of Ministry of Textiles andMrMohd. -El-Khawab, Programme Coordinator GIZ India and Dr. Rossitza Krueger, Programme Head, Sustainable Cotton Project, GIZ, in the presence of Minister of State for Textiles, Smt. DarshnaVikramJardosh, who presided over the event and Shri U. P. Singh Secretary, Ministry of Textiles.

Speaking on the occasion Smt. DarshnaJardosh said that the GIZ project is aimed at increasing volume of cotton production at least on 90,000 hac with participation of 1.50 lakh cotton farmers with yield increase by 10%. This will enable capacity building of the 1.50 lakh farmers& entrepreneurs of which about 30% will be women beneficiaries.

The Minister mentioned that India is the largest cotton producer in the world and also the 2nd largest consumer of cotton in the world with estimated consumption of 303 lakh bales (5.15 Million Metric Tones i.e. 20% of world cotton consumption of 1505 lakh bales (25.59 Million Metric Tones)It plays a major role in sustaining thelivelihood of an estimated 6 Million cotton farmers and about 50 Million people engaged inrelatedactivity suchascotton processing & trade.

She further stated that the GIZ project will also help in enhancing employment and women empowerment in training and capacity building on sustainable cotton growing practices by innovation in new cotton processing procedures and ginning etc.

Shri U. P. Singh in his address said that today being the 'World Cotton Day' is an important day for the Ministry of Textiles. He said that cotton is important cash crop and the entire edifice of Textile Industry depend on natural fibers likecotton, jute and wool. He said that development without sustainability has lost value in current scenario. The Secretary informed that focusof project is to work with major global textile companies to create the "pull" factor for improved market access by the farmers for their sustainably grown cotton. The project envisages promotion of sustainable cotton cultivation methods emphasizing on implementation of good agriculture practices, he added.

The project follows "From shelf to field" approach, with the strategy to link consumers to the cotton growers in India and work along the entire supply chain. The project is also focusing on creation and promotion of transparency about the prevalence and application of internationally recognized/accepted sustainability standards and promoting measures that reduce the water footprint in cotton production. This will help reduce vulnerability of cotton sector to ever-increasing water-stress worsened by climate vagaries.

The Ministry of Textiles, as the lead partner on the Indian government side, guides the project on main intervention areas based on its vision for textiles in India, through the establishment and convening of the project Steering Committee for project progress review and guide the project implementation. MoT enables the interface and coordination with the project nodal officers in the 4 states of Maharashtra, Gujarat, Tamil Nadu and Madhya Pradesh. MoT participates in the various International Textile Conferences and major GIZ organised events for sharing the Indian experiences and best practices, especially those emerging from this join Indo-German collaboration project. It also holds meetings with the GIZ project team for assessing technical progress, identify best practices and mapping key impact-results from time to time. This provides Ministry the evidence based best practices for mainstreaming and scaling up and in need-based policy changes.

The GIZ project envisages increase volume of cotton production atleast on 90,000 hac with participation of 1.50 lakh cotton farmers with yield increase by 10%.

# Neeraj Chopra's javelin receives highest bid of Rs 1.5 Cr. in e-auction of prestigious gifts and mementos presented to Prime Minister




